பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 06 சனிக்கிழமை (20.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 56

# வாகரை நகரப் பகுதி அரச படைகள் வசம்!

## தாக்குதல் நிலைகள் மாற்றமே; எவையும் பறிபோகவில்லை என்று புலிகள் அறிவிப்பு

கொழும்பு,ஜனவரி 20

**ஆஸ்பத்திரிப் பகுதி உட்பட வாகரை நகரப் பிரதேசம் அரசாங்கப் படைகளினால் நேற்றுப் பிற்பகல் கைப்பற்றப்பட்டதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.**

**ஆனால் -**

**முக்கிய தாக்குதல் நிலைகள் பனிச்சங்கேணிக்கு மாற்றப்பட்டன. எங்கள் நிலைகள் எதுவும் படையினரிடம் பறிபோகவில்லை என்று விடுதலைப் புலிகள் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.**

கடும் எதிர்ப்பின் மத்தியில் ஆஸ்பத்திரி உட்பட வாகரை நகரம் அரசாங்கத்திடம் வீழ்ந்துவிட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க உறுதிப்படுத்தினார்.

வாகரை ஆஸ்பத்திரியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நிலைகள் எதுவும் இருக்கவில்லை. எங்களது முக்கிய தாக்குதல் நிலைகள் பனிச்சங்கேணிக்கு மாற்றப்பட்டன தவிர எங்களின் எந்த நிலைகளும் படையினரிடம் பறிபோகவில்லை என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் உறுதிப்படுத்தினார்.

காயமடைந்த தங்கள் உறுப்பினர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக விடுதலைப் புலிகள் வாகரை ஆஸ்பத்திரியை பலாத்

(04ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.20

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தது.

திருமலை - காங்கேசன் சேவையில் ஈடுபட்டிருந்த கப்பல் வழமையான பழுது பார்க்கும் வேலைகளுக்கு சென்றுள்ளது.

அநேகமாக இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 13ஆம் திகதியின் பின்னர் திருமலை - காங்கேசன் பிரயாணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே. (அ-1)

## கண்டியில் தேடுதல்

கொழும்பு, ஜன.20

கண்டி தெல்தெனிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தமிழர்கள் வாழும் பகுதிகளில் விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இதன்போது வத்தளை, ஹெந்தளை பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நடத்திய தேடுதலின்போது கைதுசெய்யப்பட்ட இவர் தற்போது தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

திகன, அலுத்வத்த, ரஜவெல, அம்பங்கோட்டை ஆகிய இடங்களில் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(த)

## சந்திவெளியில் சண்டை

கொழும்பு, ஜன. 20

மட்டக்களப்பு - சந்திவெளியில் நேற்று அதிகாலை 4.30 மணி முதல் மூன்று மணித்தியாலங்கள் படையினருக்கும், புலிகளுக்குமிடையே கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு, சித்தாண்டி, சந்திவெளிக்கு அருகே அமைந்துள்ள இராணுவ முகாம் மீது சிறு ஆயுதங்களால் நேற்று அதிகாலை 4.30 மணி யளவில் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். பின்னர் மோட்டார் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. படையினர் பதில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். சுமார் மூன்று மணித்தியாலங்கள் இத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பின்னர் புலிகளின் தொலைத் தொடர்புகளை ஒட்டுக்கேட்டபோது 9 புலிகள் பலியாகினர் எனவும், 12 புலிகள் காயமுற்றனர் எனவும் தெரியவந்துள்ளதாகவும் ஊடக நிலையம் தெரிவித்தது.

காயமுற்ற புலிகள், வாகரையிலுள்ள 'லக்ஷ்மன் பேஸ்' முகாமில் சிகிச்சைக்கென சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலையம் தெரிவித்தது. (த)

## திருமலையிலும் மோதல்!

கொழும்பு, ஜன.20

திருகோணமலைக்கு வடக்கில் நேற்று அதிகாலை படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் புலிகளுக்குப் பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்தது.

திருகோணமலைக்கு வடக்கில் சிறிமங்களபுர - மீகஸ்கொடல்ல எனும் கிராமங்களுக்கு இடையே புலிகளின் நடமாட்டம் காணப்படுவதாகப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து படையினர் தாக்குதலை ஆரம்பித்தனர். புலிகளும் பதில் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். படையினர் நடத்திய தாக்குதலை அடுத்து புலிகள் கொல்லப்பட்ட மற்றும் காயமுற்ற தமது சகாக்களைச் சுமந்து கொண்டு பின்வாங்கியுள்ளனர் எனவும் ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, படையினர் நடத்திய தேடுதலில் ஒரு புலி உறுப்பினரின் சடலத்தையும், 2 ரி-56 ரைபிள்கள், ஆர்.பி.ஜி. குண்டு மற்றும் இரு கூடாரங்களையும் கைப்பற்றியுள்ளனர் எனவும் அந்த நிலையம் தெரிவிக்கின்றது. (த)

# மக்களின் ஒட்டுமொத்த இடம்பெயர்வால் வாகரையில் பெரும் மனிதப் பேரவலம்!

## ஆறு, கடற்கரை, காட்டுவழிகளால் வெளியேற்றம்!!

கொழும்பு,ஜன.20

வாகரை நோக்கி நேற்று முன்தினம் இரவில் அரச படைகள் ஏவியதாகக் கருதப்படும் ஷெல்கள் ஆஸ்பத்திரியை அண்டிய இடங்களில் விழத் தொடங்கியதிலிருந்து, மக்கள் அங்கிருந்து ஒட்டுமொத்தமாக வெளியேறத் தொடங்கியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கால் நடையாகவும், வாகனங்களிலும் நேற்று நண்பகல் வரை சுமார் 12,000 பேர் வெளியேறிக்கொண்டிருந்ததாக அந்தப் பகுதியில் பணியாற்றும் இத்தாலி நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர் ஒருவர் றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்திருக்கிறார்.

இந்த மாபெரும் மக்கள் இடம்பெயர்வை (EXODUS) ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்தியிருக்கிறது.

வாகரையிலிருந்து இடம்பெயர்ந்து

(04ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் இரு தினங்களில் ஐந்து இளைஞர்கள் கொலை

வவுனியா, ஜன. 20

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு நான்கு இளைஞர்களும், நேற்று பிற்பகலில் ஒருவருமாக ஐவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

வவுனியா - மதகுவைத்தகுளம் வீதியில், தவசிக்குளம் ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகில் மூன்று இளைஞர்களின் சடலங்களை நேற்று முற்பகல் பொலிஸார் மீட்டனர்.

18 முதல் 22 வயது மதிக்கத்தக்க இந்த மூன்று இளைஞர்களும் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், அவர்களில் இருவரது சடலங்களில் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - தேக்கவத்தைப் பகுதியில் நேற்றுப் பிற்பகலில் சிங்கள இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இனந்தெரியாத நபர்கள், நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இவரை பிஸ்டலால் சுட்டுக்கொன்றனர் என்று வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி குமார சந்தநாயக்க தெரிவித்தார்.

இம்மாதம் மட்டும் இதுவரையில் இருபதுக்கும் மேற்பட்ட சிவிலியன்கள் வவுனியாவில் கொலையுண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த-312)

# கஞ்சிகுடிச்சாறில் தாக்குதல்: 10 அதிரடிப்படையினர் மரணம்

அம்பாறையில் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் நிலைகொண்டுள்ள விசேட அதிரடிப் படையினரின் முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 10 சிறப்பு அதிரடிப்படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன், 10 இற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர் எனப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஆக்கிரமிப்பு நகர்வை மேற்கொண்டுள்ள படையினருக்கு வழங்கலை மேற்கொள்வதற்காக கஞ்சிகுடிச்சாறு - வக்கிமுட்டியா பகுதியில் அதிரடிப்படையினர் அமைத்துள்ள முகாம் மீது நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் பத்து விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன், 10 இற்கும் மேற்பட்ட அதிரடிப்படையினர் காயமடைந்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் மீது கிளைமோர் தாக்குதலையும், நேரடித் தாக்குதலையும் புலிகள் நடத்தியுள்ளனர்.

இவ்வாறு புலிகளின் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

கிழக்கில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றின்போது விசேட அதிரடிப்படையின் இன்ஸ்பெக்டர் ஒருவர் உயிரிழந்தார் எனக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (க)

## புத்தளத்தில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் அகதி முகாம்களில் வாழும் முஸ்லிம்கள் தங்களை மீளக் குடியமர்த்தக் கோரி நேற்று புத்தளம் பாலாவியில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை 'யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி' ஏற்பாடு செய்திருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

கற்பிட்டி, புத்தளம், மதுரங்குளி உள்ளிட்ட பல இடங்களில் ஒன்றுகூடிய மக்கள் அவ்விடங்களில் இருந்து பாலாவி நகரை நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

பாலாவி பெரிய பள்ளிவாசலுக்கு அருகில் ஒன்று கூடிய இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு பொதுக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

# புலிகள் மீதான தடையை ஜேர்மன் அரசு நீக்காது

## அந்த நாட்டுத் தூதர் ஹெல உறுமயவினரிடம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஜேர்மனி நீக்காது என்று இலங்கை அரசுக்கு ஜேர்மனிய தூதுவர் ஜேர்கன் வீத் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே வீத் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஹெல உறுமயவின் அணிக்கு அதன் நாடாளுமன்றத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தலைமை வகித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய விதிகளின் பிரகாரம் விடுதலைப் புலிகள் மீதான தடை ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சேர்ந்து எடுத்த முடிவாகும். அந்த முடிவை தனி ஒரு நாட்டினால் மாற்றமுடியாது. ஊடகங்கள் தெரிவித்தது போன்று ஜேர்மன், ஸ்ரீலங்காவிற்கான உதவிகளை நிறுத்தவில்லை என்றும் ஜேர்மனிய தூதர் தெரிவித்தார் என்று ஹெல உறுமயவினர் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ள இருந்த 14 பாடசாலைகளின் புனர்நிர்மாண வேலைகள்தான் நிறுத்தப்பட்டுள்ளன. தற்போது இடம்பெற்றுவரும்

(04ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை - ஓட்டமாவடியில் நான்கு முஸ்லிம்களைக் காணோம்!

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஓமடியாமடு பகுதியில் விறகு வெட்டுவதற்காகச் சென்ற நான்கு பேர் காணாமல் போயுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த எம்.ஐ. தாஜுதீன் (வயது-32), என்.எம். சுபைர் (வயது-35), ஏ.எல். ஹலால்தீன் (வயது-27), யூ.எல். முஹைதீன் (வயது-32) ஆகிய நால்வருமே காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 15 ஆம் திகதி ஓட்டமாவடியில் இருந்து 11 பேர் விறகு வெட்டுவதற்காக ஓமடியாமடுப் பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதி ஒன்றுக்குச் சென்றுள்ளனர். மூன்று

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JESMIN BEAUTY CENTRE

FACIAL AND BLEACH
MAKE - UP
HAIR STARITING AND PERMING
SARRY WORK

வகுப்புகள் மற்றும் அனைத்து ஓடர்களும் சுன்னாகத்தில் மயிலணி JESMIN BEAUTY CENTRE (வளர்பிறை சனசமூக நிலையம் முன்பாக) சாவகச்சேரியில் JESMIN BEAUTY CENTRE இலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

R.KEETHA,
ADDYAMPIDDY ROAD,
CHAVAKACHCHERI.
T.P: 077 6184085, 077 6156098.
(57200)

## A/L 2009

B.Sf. - Mr. பசில்
Acc. - Mr. தவா
Econ. - Mr. சுஜீதரன்
Tamil - Mr. சிவா
Chris. - Mrs. A. மல்லிகா
* Logic, Geo., Drama, Hindu., Eng.
Phy. - Mr. வாணன்
* Che., C/Ma.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

### தம்பு சங்கரப்பிள்ளை அப்புத்துரை

(இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்)

வையத்துள் வாழ 13.09.1919 — விண்ணகத்துள் வாழ 20.12.2006

நாளை [21.01.2007] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற விருக்கும் அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

"சுகந்தம் இல்லம்"
வன்னியசிங்கம் வீதி [மத்திய மருந்தகத்திற்கு அருகில்],
இணுவில் தெற்கு, இணுவில். — குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் கதிர்காமு இராஜதுரை

தோற்றம் : 12.02.1935
மறைவு : 31.01.2006
திதி: 20.01.2007

அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவமாய்
பாசத்தின இருப்பிடமாய்
இதயத்தில் கலந்த எம் தெய்வமே!
எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலங்களும்
உங்கள் அன்பான திருவுருவமும்
என்றும் எம் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் நினைவில் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (57234) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### யோசப் ஜெயராணி

தோற்றம்: 27.01.1957 மறைவு: 20.01.2006

ஓராண்டு நிறைந்ததம்மா - உன்
நினைவுகள் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
பாசமுள்ள அன்னை உயிர் துடிதுடிக்க
நேசமிகு சோதரர்கள் தினம் தினம் பதறுகின்றனர்
கனிவான உன் பேச்சும் எழில் வதனமும்
எங்கே இனிக் காண்போம் இத் தரணியில்
இறைசாந்தி வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், சகோதரர், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

19/8, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். (57008)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பாறுபதி

காரைநகர், பலுகாட்டைப் பிறப்பிடமாகவும் காலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாறுபதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் அன்னபாக்கியலெட்சுமி, சரஸ்வதி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (களுமாத்தையா, காலி), முருகானந்தன், சிவானந்தராசா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொட்டு மணியம்), மோகனதாஸ், நித்தியலட்சுமி, தர்மதேவி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலியில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

128, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

### தியோப்பிள்ளை பிலோமிநாதன் (துரைசிங்கம்)



பலாலியைப் பிறப்பிடமாகவும் பொற்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட தியோப்பிள்ளை பிலோமிநாதன் (துரைசிங்கம்) 17.01.2007 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோப்பிள்ளை - மேரி றோசலின் தம்பதியரின் மகனும் முத்துத்துரை தம்பதியரின் மருமகனும் தவக்கொடியின் (வண்டு) அன்புக் கணவரும் ஜெயக்குமார் (லண்டன்), றொபேட் நேசகுமார் (இத்தாலி), தியோக் குமார் (கனடா), கலின்குமார் (லண்டன்), தெய்வமலர், புஸ்பமலர், நேசமலர், உதயகுமார், ரவிக்குமார், திருக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் வில்மன், றோன்ஸ் ஜெயராஜ், மேரி அனைற்றோபினா, நிர்மலா ஆகியோரின் மாமனும் சுமி, சிந்து, சுரேக்கா, சுகிர்தா, றேகிஷ், சுதர்சனா, யூட், மதுஷா, மதுஷன், றெயிந்தா, றெயிந்தன், றெனோ, திரிஷா, விதுஷன், சாறுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி,
குடத்தனை. (57250)

தகவல்:
தவக்கொடி (மனைவி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையிலிருந்து தரம் - 5, 2006 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவி

செல்வி அபிநஜா சந்திரன்

(137 புள்ளிகள்) அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவச் செல்வங்களான

ச. அனோஜா (122 புள்ளிகள்), ரா.நிதுஜா (110 புள்ளிகள்)

ஆகியோரையும் வாழ்த்துவதுடன், இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் ஊக்குவித்த பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை பழைய மாணவர் சங்கம்
யா/ மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. வேலணை.


## எவர் சைன் கல்வி நிலையம்

123, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

G.C.E. A/L கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.

2007 BATCH அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

2008 BATCH வகுப்புகள் நடைபெறுகின்றன.

2009 BATCH 20.01.2007 சனிக்கிழமை (இன்று) 3 மணிக்கு ஆரம்பமாகின்றது.

பௌதிகவியல்: திரு.N.சரவணபவன் (B.Sc,Dip. In Edu.)
இணைந்த கணிதம்: திரு.T.விஜேந்திரன் (B.Sc Dip. in Edu.)
(57235)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எங்கள் ஆலயத்திற்கு நிதியுதவி புரிந்த 'தெய்வசித்தன்'

### இராசரத்தினம் நடராசா

(இளைப்பாறிய வீதி, அபிவிருத்தி சபை பொறியியலாளர்)

தோற்றம்: 25.03.1940 மறைவு: 21.12.2006

பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வல்லிபுரநாதரை வேண்டி நிற்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(57149)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

நெஞ்சம் மறப்பதில்லை

தோற்றம்: 12 ★ 10 ★ 1936



மறைவு: 21 ★ 12 ★ 2006

திருமதி

### சின்னையா பகவதி

(Former Nurse, Green Memorial Hospital, Manipay)

கடமையைக் கண்ணியமாய் செய்து
குடும்பத்தின் சுமைதாங்கியாகினாய் அம்மா
எங்களின் நலனுக்காய் கண்விழித்தாயே
உங்கள் பிரிவினால் தவிக்கின்றோம் அம்மா!

மூத்த நயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை. (57132) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### கயித்தாம்பிள்ளை மரியதாஸ் (இரத்தினம்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கயித்தாம்பிள்ளை மரியதாஸ் 18.01.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசாத்தியின் கணவரும் வசந்தி, காலஞ்சென்ற ரவி, பாலதாஸ் (சுவிஸ்), அன்ரன் (சுவீடன்), தருமதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் ரஜனி, வதனி, றோசா ஆகியோரின் மாமனும் ஜெசிற்றா, ஜெனசி, சப்னா, கெவின், சபீனா ஆகியோரின் பேரனும் சின்னமணி, திரவியம், யேசுமலர், ராசா, இராக்கினி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (20.01.2007) பிற்பகல் 2 மணிக்கு புனித தோமையார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல். (57249) தகவல்: மனைவி.

### வைத்திலிங்கம் தில்லைச்சந்திரன்

(ஹோமியோபதி டாக்டர், R.H.M.P. Srilanka, H.D. Canada)



மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய தில்லைச்சந்திரன் 17.01.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சரஸ்வதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - பூரணத்தின் மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் ஜெயந்தி (கனடா), சுகந்தி (கனடா), சிவகாமி (கனடா), துஸ்யந்தி (கனடா), ரகுராம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.01.2007 வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். தகவல்: சகோதரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைதடி மேற்கைச் சேர்ந்த
மகேந்திரன்-நிர்மலாதேவி தம்பதியரின் புதல்வி

### செல்வி ம.துஷாரினி

(யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் கல்வியில் துலங்க வாழ்த்துகின்றோம்.

இவரை வழிப்படுத்திய யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியர்களுக்கும், திரு. வே.அன்பழகன ஆசிரியருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அண்ணன்மார்.
சுலோத் (லண்டன்), வினோத் (பிரான்ஸ்).
(57215)

## யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை 2006ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெய்தி சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்



செல்வன்
குகநேசன் கேமராஜ்
புள்ளிகள்: 163
மாவட்ட நிலை: 38
சங்கானைக் கோட்டம்: 2ஆம் நிலை



செல்வி
தியாகமூர்த்தி இந்துஜா
புள்ளிகள்: 133
மாவட்ட நிலை: 827

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
(65609)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் புதிய அதிபராக 01.01.2007 முதல் பதவியேற்றுள்ள

### செல்வி ஜெயராணி நாகலிங்கம்

(B.A. (Spc.-Geog), Dip -In- Ed. M.Phil.)

அவர்களைப் பாராட்டுவதுடன், இவரது அதிபர் சேவை சிறப்புற்று, மேன்மேலும் முன்னேற்றமடைந்து சீரும் சிறப்புப்பெற்று வாழ சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையாரின் அருளாசியை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:

நாகராஜா குடும்பத்தினர்,
மயில்வாகனம் குடும்பத்தினர்,
சபாரட்ணம் குடும்பத்தினர்,
தனேஸ்வரலிங்கம் குடும்பத்தினர்,
நாகலிங்கம் விஜயராணி,
நாகலிங்கம் ஜெயகுமார்,
முரளிதரன் குடும்பத்தினர்,
பரோதரன் குடும்பத்தினர்,
ஜெயகாந்தன் குடும்பத்தினர்,
திருநாவுக்கரசு குடும்பத்தினர்,
இரட்னராஜா குடும்பத்தினர்,
குடும்ப உறவினர்கள்.
(57830)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் லயன்

### இராஜரட்ணம் நடராசா

(தெய்வசித்தன், திருப்பணி சுரபி)

ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர், தலைவர், உரும்பிராய் ஓடையம்பதி கற்பகப் பிள்ளையார் ஆலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், உபதலைவர், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், ஸ்தாபகத் தலைவர் - உரும்பிராய் லயன்ஸ் கழகம்.

மண்ணில்: 25.03.1940 விண்ணில்: 21.12.2006

21.12.2006 வியாழக்கிழமையன்று இறைபதம் எய்திய எமது அன்புச் சகோதரனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.01.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்வதுடன், தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவுத் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது எம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

..தவாலய வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (57228) - சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



### வெற்றிவேலு துரைராஜா

கந்தரோடை வீதி, சுன்னாகம் மேற்கு வாசியும், தற்போது லண்டன் Surrey இல் வாழ்ந்து வந்த எங்கள் உயிர் நண்பனும், சமூக சேவையாளனுமாகிய வெ.துரைராஜா (முதலியன்) அவர்களின் மறைவைக் கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ந.இராசரத்தினம்,
ந.அரசரத்தினம்,
நாகம்ஸ் - சுன்னாகம்.
(57107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# இரட்டை வேட அணுகுமுறையால் அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு

"சுகம் வரும்; ஆனால் ஆள் தப்பாது" - இப்படி ஒரு பேச்சு மொழி வழக்கு, நம் மத்தியில் உள்ளது. அமைதி முயற்சிகளை அரசு கையாளும் விடயத்தைப் பார்க்கும்போது இந்த மொழித் தொடர்தான் நினை வுக்கு வருகின்றது.

ஒரு புறம் இராணுவப் போர்வெறித் திட்டம். மறு பக்கத்தில் அமைதி முயற்சிகள் குறித்து சர்வதேச மட்டத்தில் ஆரவாரப் பிரசாரம். இந்த இரட்டைவேட அணுகுமுறை, நாட்டை எங்கே கொண்டுபோய் நிறுத்தப்போகின்றது?

மட்டக்களப்பு, வாகரையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களைக் கைப்பற்றும் இறுதித் தாக்குதலை இலங்கை அரசின் இராணுவம் முடுக்கி விட்டுள்ளது என்று கொழும்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அதாவது, யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருப்பதாகக் கூறிக் கொண்டே பெரும் எடுப்பிலான வலிந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில், தென்னிலங்கையில் பயணிகள் பஸ்ஸில் இடம் பெற்ற - அப்பாவி மக்களின் உயிர்களைக் காவு கொண்ட - இரு குண்டுத் தாக்குதல்களையும் அமெரிக்கா வன்மையாகக் கண்டித்திருந்தது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதர், அச்சமயம் கண்டியில் இருந்தார். அவர் அங்கிருந்தபடியே இது தொடர்பான கண்டன அறிவிப்பை விடுத்தார்.

பயணிகள் பஸ்ஸில் நடத்தப்பட்ட கொடூரமான குண்டுத் தாக்கு தலைக் கண்டித்த அவர், வாகரையில் இடம்பெறும் விவகாரம் குறித்து அதிகம் அலட்டாமல் அமுக்கி வாசித்தார். யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிப்பதா... றும் அரசு, அந்தச் சமயத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வாகரைப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்குப் பெரும் போர் ஆக்கிரமிப்புத் திட்டத்தைச் செயற்படுத்தி வருவதைக் கண்டும், காணாமலும் அவர் விட்டுவிட்டார். அது மட்டுமல்ல. வாகரையில் இடம்பெறுவது அரசுப் படைகள், வலிந்து மேற்கொள்ளும் பெரும் இராணுவ நடவடிக்கையாகவும் அவரின் கண்ணில் படவில்லை. 'வாகரை வன் செயல்கள்' என்பதோடு அவரின் கருத்து அமுங்கி விட்டது.

அதேசமயம், இந்தியா சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் ஒரு கருத்தை அங்கு வைத்து வெளியிட்டிருக்கின்றார்.

*"தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான அரசியல் நடைமுறைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். தமிழ் மக்களின் ஆதங்கங்களைத் தீர்க்கக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை ...டுவதற்கான தேடல்கள் - முயற்சிகள் - தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். ஆனால், அதேசமயம் இரத்தக் களரியைப் புலிகள் தொடரும் வரை புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் தொடரும்."* - என்று அமைச்சர் மங்கள அறிவித்திருக்கின்றார்.

இதேபோன்ற கருத்தை இலங்கைப் பாதுகாப்புத் துறைப் பேச்சாளர் அமைச்சர் ரம்புக்வெலவும் கொழும்பில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

*"கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற படை நடவடிக்கை கள், வாகரையை மீட்பதற்கான இறுதிக் கட்ட நகர்வாகும். இருந்த போதிலும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நிறுத்திப் பேச்சுக்கு வந்தால் நாளையே பேச்சுகளை ஆரம்பிக்க அரசு தயாராக உள்ளது."* - என்று அமைச்சர் ரம்புக்வெல ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

தாமே வலிந்த தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டு, புலிகள் தாக்குதல்களை நிறுத்தினால் நாளையே பேச்சை ஆரம்பிக்கலாம் என்று அவர் கூறுவது வேடிக்கையானது. அவ்வாறு கூறி சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றும் வேலையைக் கொழும்பு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அரசுத் தரப்பின் இந்தப் பாணியிலான போக்குக்கு, விடுதலைப் புலிகள் தரப்பு ஏற்கனவே திட்டவட்டமாகவும், தெளிவாகவும் பதிலளித்து விட்டது என்பதும் கவனிக்கத் தக்கது.

*"கடந்த காலச் சிங்களத் தலைமைகள் போன்று மஹிந்த ராஜபக்ஷவும் இராணுவப் பலத்திலும், இராணுவ அணுகுமுறையிலும், இராணுவ வழித் தீர்விலுமே நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றார். தமிழ் மக்களது தேசியப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு நாம் விடுத்த இறுதியான - உறுதியான - அவசர - வேண்டு கோளையும் நிராகரித்து, கடும்போக்கைக் கடைப்பிடித்துக் காலத்தை இழுத்தடித்து வருகின்றார். புலிகளை அழிக்கும் இலக்குடன் ஒருபுறம் போரைத் தீவிரமாக முடுக்கிவிட்டு, மறுபுறம் சமாதான வழித் தீர்வு பற்றிப் பேசுகின்றார். போரும் சமாதானமும் என்ற இந்த இரட்டை அணுகுமுறை, அடிப்படையிலேயே தவறானது. எந்தப் போராட்டச் சக்தியுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமோ, அந்தப் போராட்ட சக்தியை அந்நியப் படுத்தி, அழித்துவிட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது என்றுமே நடக்கப் போவதில்லை. இது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.*

*மஹிந்தவின் அரசு, படைப்பலத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்க விரும்புகிறது. தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, அதன் மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று, தான் விரும்பும் அரைகுறைத் தீர்வைத் தமிழர் தலையிற் கட்டிவிட எண்ணுகிறது ......"* - இப்படி கடந்த மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தெளிவுபடுத்தினார்.

ஆகவே, போர்முனைப்புச் செயற்பாட்டில் தீவிரமாக இருக்கும் அரசு, அதில் உடனடியாக சில வெற்றிகளைக் காணலாம். காணும் வாய்ப்பு அதிகம் உண்டு. அது அரசுக்குத் தெற்கில் பெரும் ஜனரஞ்சக பலத்தைத் தற்காலிகமாக உருவாக்கித் தரும் என்பதும் உறுதி. ஆனால், அமைதி முயற்சிகளுக்கான இடைவெளியை இந்தப் போர்முனைப்புப் போக்கு நிரந்தரமாக விரிவடைய வைத்து, சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தையே அது அடியோடு இல்லாதொழித்து விடும்.

ஆக, 'சுகம் வரும்; ஆள் தப்பாது' - என்ற நிலைமை தான்.

# குடாநாட்டுக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆளுநர் இணக்கம்.

திருகோணமலை, ஜன.20

குடாநாட்டுக்கு இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலித்து நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாண ஆளுநர் இதற்குக் கொள்கை அளவில் இணங்கியுள்ளார் என்று தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மாகாசிவம் தெரிவித்தார்.

குடாநாட்டுக்கு இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடியதாகவும் -

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த அவர் கொள்கை அளவில் இணங்கியுள்ளார் என்றும்- பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

* குடாநாட்டுக்கு இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்களின் நவம்பர், டிசெம்பர், ஜனவரி ஆகிய மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.
* ஆசிரியர்கள் வேலைக்கு திரும்ப முடியாமைக்காக தெரிவித்துள்ள காரணங்களை விசாரித்து முடிவு செய்ய மேன்முறையீட்டு விசாரணை நடத்தவேண்டும்.
* கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், இருதய நோய் போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் தொடர்பாக விசேடமாக ஆராயவேண்டும்.
* எஞ்சியோரை பாதுகாப்பான போக்குவரத்து சேவை திரும்பும் வரை குடாநாட்டில் உள்ள கஷ்டப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கவேண்டும்.
* இதன் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில், ஓய்வு பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். (அ-1)

சிக்குன்குனியா நிவாரணியான

# சித்தமருத்துவக் குடிநீரை தயாரிக்க முடியாத தடங்கல் நிலை இப்போது

கைதடி, ஜன.20

சிக்குன்குனியா வைரஸ் காய்ச்சல் நோய் களுக்கு சிறந்த மாற்று நிவாரணியாக வழங்கப்பட்டு வந்த சித்த மருத்துவக் குடிநீரைத் தயாரித்து விநியோகிக்க முடியாத தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபரின் நிதி உதவித் திட்டம் ஒன்றின் கீழேயே யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினர் பிரஸ்தாப குடிநீரை தயாரித்து மருத்துவ முகாம்கள் ஊடாக விநியோகித்து வந்தனர்.

ஆனால், அரச அதிபரால் வழங்கப்பட்ட நிதி முடிவடைந்து விட்டதால் விசேட குடிநீரை தயாரிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக அறியப்படுகிறது. இதனால், இந்தக் குடிநீருக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (அ-1-75)

# சுன்னாகம் பகுதியில் ஒருவாரத்தில் 10 வர்த்தக நிலையங்களில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன.20

சுன்னாகம் நகரப்பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் பத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. ஊரடங்கு நடைமுறையில் இருந்த வேளையிலேயே இக்கொள்ளைகள் இடம் பெற்றிருக்கின்றன.

காங்கேசன் துறை வீதியில் உள்ள கடைகளில் இருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள், டெக் மற்றும் வானொலிப் பெட்டிகள் உட்பட பல இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இதே போன்று சந்தை வீதியிலும் உள்ள ஆறு பலசரக்கு கடைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்தும் பால்மா வகைகள் உட்பட பல அத்தியாவசியப் பொருள்களும் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

இக்கொள்ளைகள் மற்றும் திருட்டுக்கள் சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-68)

# வரணி மேற்கு பிரதேசங்களில் மண் அகழ்வு மீண்டும் மும்முரம்

தென்மராட்சி கிழக்கு, ஜன.20

வரணி மேற்கு கரம்பான் மற்றும் தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலடிப் பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு மீண்டும் மும்முரமாக இடம் பெறுகிறது.

இரவோடு இரவாக அகழப்படும் மண் இப்பகுதியில் உள்ள வீதியின் அருகில் வைத்து காலை வேளைகளில் பார ஊர்திகளில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் காலை வேளைகளில் இப்பாதையில் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் மாரி மழை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மண் அகழ்வு மீண்டும் இப்போது முழுவீச்சில் தொடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-122)

**நாளை**

தை - 07
ஞாயிற்றுக்கிழமை
21.01.2007
திதி : துதியை
முற்பகல்: 07.50
நட்சத்திரம் : அவிட்டம்
மாலை: 06.09 வரை
சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

## திருமலையில் கைத்தொலைபேசி சேவைகள் ஸ்தம்பிதம்

திருகோணமலை மாவட்டத்துக்கான கைத்தொலைச் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

கடந்த இரு தினங்களாக இந்தச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-1)

## நவிண்டில் முகாம் மீது தாக்குதல்

உடுப்பிட்டி, ஜன.20

வடமராட்சி, நவிண்டில் பகுதியில் உள்ள படைமுகாம் மீது நேற்றுக்காலை 7 மணிக்கு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிரனேட் வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம் ஆகியன மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. சேதவிவரம் செய்தி எழுதும் வரை தெரியவரவில்லை. (அ-1-155-115)

# குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## உரும்பிராயில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜன.20

உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் பொது மருத்துவ முகாமும் கண்பரிசோதனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை உரும்பிராய் அரச வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இம்முகாமுக்கென கொழும்பு லயன்ஸ் கழகங்களால் மருந்து வகைகளும் கண்ணாடிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (1-202)

## யாழ். பொலிஸ் நிலையத்தில் பொருள்கள் விநியோகம் இன்று 9மணி தொடக்கம்

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் உள்ள நலன்புரி விற்பனை நிலையத்தில் இன்று மு.ப. 9மணி தொடக்கம் பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

அரிசி, கோதுமை மா, நெத்தலிக் கருவாடு முதலியனவும் அப்பியாசக் கொப்பிகள், குமிழ்முனைப் பேனாக்கள் என்பனவும் வழங்கப்படும்.

பொருள்களை வாங்க வருவோருக்கு "ரோக்கன்" அட்டைகள் வழங்கப்பட்டு அவற்றின் ஒழுங்கில் விநியோகம் நடைபெறும் என்று யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## மருந்து வகைகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன

பொது மற்றும் விசேட மருந்து வகைகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் கோரிக்கையின் பேரில் 23 லட்சம் ரூபா பெறுமதியான 222 வகையான மருந்துவகைகளை அரச மருத்துவக் கூட்டுத்தாபனம் விமானம் மூலம் அனுப்பிவைத்துள்ளது.

பனடோல், பரசிற்றமோல் போன்ற பொது நோய்கள் மற்றும் நீரிழிவு, இருதய நோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கான விசேட மருந்துவகைகளும் இவற்றில் அடங்கும்.

மேற்படி மருந்துவகைகள் தரம் பிரிக்கப்பட்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் சங்கத்தின் மருந்தகம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மருந்துவகைகள் தேவைப்படுவோர் வைத்தியர்கள் வழங்கிய மருந்துச் சீட்டைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

## பருத்தித்துறை சாலைக்கு இரு புதிய பஸ்கள்

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்கு புதிதாக இரு பஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை பருத்தித்துறை யாழ்ப்பாணம் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு பஸ்வண்டி 750 பாதையிலும் மற்றையது 764 பாதையிலும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. (173)

## இன்று

வெளிமாவட்டத்தில் கடமை புரிந்து தற்போது பயண வசதி இன்றி யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள அரச ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (1-202)

* * *

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி நடத்தும் புலமைப் பரிசில் வழங்கல் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலிகாமம் கொத்தணி மானிப்பாய் கலையரங்க மண்டபத்தில் வலி.கொத்தணித் தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். (1-100)

* * *

உள்ளக எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்காக திருநெல்வேலி அ.த.க பாடசாலையில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட வழிகாட்டல் வகுப்புகளில் கலந்து கொண்டவர்களை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி பாடசாலைக்கு சமுகம் தருமாறு ஒருங்கிணைப்பாளர் கேட்டுள்ளார். (1-202)

* * *

வண்ணார்பண்ணை வட கிழக்கு, கல்லட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரி அம்பாள் ஆலய பிரதம குரு துரையப்பா ஐயாவின் 40 ஆவது நினைவு நாளை ஒட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலயத்தில் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஒட்டுமொத்த இடம்பெயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும் அகதிகளைத் தங்கவ்வப்பதற்காக வாழைச்சேனையில் நான்கு இடங் களில் தற்காலிக ஓமுகாம்களை அமைப்ப தற்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஏற் பாடுகளைச் செய்துள்ளதாவும் அறிவிக்கப்படுகின்றது.

இடம்பெயரும் மக்களுக்கான உதவி மற்றும் நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு இணைந்து செயற்படுமாறு, மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள் அனைவரும் மட்டக்களப்புச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வைத்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**வாகரைவிட்டு முழுமையாக வெளியேற்றம்**

இதற்கு முன்னர் பல தடவைகள் இடத்துக்கு இடம் மாறி மாறி இடம்பெயர்ந்த மக்களே இப்போது வாகரையை விட்டு முழுமையாக வெளியேறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பெரும் மனித நெருக்கடி நிலை**

மக்கள் ஒரேயடியாக - ஒட்டு மொத்தமாக - வாகரையிலிருந்து இடம் பெயர்ந்துவருவது பெரும் மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கி இருப்பதாக சர்வதேச தொண்டர் அமைப்புகள் தெரி வித்திருக் கின்றன.

வாகரையிலிருந்து இராணுவசோதனை நிலையங்கள் ஊடாகவும், காட்டு வழிகள் ஊடாகவும் வந்து கொண்டிருக்கும் அகதிகளை சமாளித்துப் பராமரிக்கும் அவசர ஏற்பாடுகளைச் செய்வதற்காக மட்டக்களப்பிலிருந்து மீட்புக் குழுக்கள் வெலிகந்த அருகே உள்ள ரிதிதென்ன என்ற இடத்திற்கும், கஜுவத்தைப் பகுதிக்கும் விரைந்துள்ளன.

இதேசமயம் இடம்பெயர்ந்தவர்களில் சுமார் ஆயிரம் பேர் நேற்று கல்குடா தேர்தல் தொகுதியிலுள்ள கட்டுமுறிவுக் குளம் கிராமத்தைச் சென்றடைந்துள்ளனர்.

வள்ளங்கள் மூலமாகவும், சுமைகளுடன் நடந்தும் தாம் வந்தனர் என இந்த அகதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்களை எந்த இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்புவது என்பதில் தாங்கள் தற்பொழுது பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்து செல்லும் மக்களில் பலர் கடற்கரையோரமாக நடந்து செல்கின் றனர்.

**காட்டுவழியாகவும் வெள்ளைக்கொடியுடன் இடம்பெயர்வு**

மற்றும் பலர் காட்டுப் பிரதேசங்கள் ஊடாக வாகனங்களில் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் வெள்ளைக் கொடிகளைக் கட்டியவாறே செல்கின்றனர்.

மக்கள் இடம்பெயர்ந்துசெல்லும் பாதைகளின் நுழைவு இடங்களிலும் வெளிச்செல்லும் இடங்களிலும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் யுனிசெவ் அதிகாரிகள் பணிபுரிகின்றனர்.

நேற்று நண்பகலுக்கு முன்னர் சுமார் 5000 மக்கள் பிரதான இராணுவச் சோதனைச் சாவடியை அடைந்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

**3ஆயிரம் பேர் ஆற்றைக்கடக்க முடியாத நிலையில்**

மேலும் சுமார் 3,000 மக்கள் பெரிய ஆறு ஒன்றை கடப்பதற்கு இயலாமல் தடைப்பட்டு நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை காலையிலிருந்தே மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அவர்கள் தமக்குத் தெரிந்த பாதைகளால் நடக்கத் தொடங்கினர்.

ஆயிரக்கணக்கான மக்கள் ஆறு பெருக்கெடுப்பது போன்று துளி இடைவெளியும் இன்றி நீர்த்திவலைகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்று ஐ.நா. வின் பேச்சாளர் ஓர்ஸா கிளின்ரன் றொய்ட்டருக்குத் விவரித்தார்.

கடந்த சில தினங்களில் ஏற்கனவே 20,000 தொடக்கம் 25, 000 மக்கள் இடம்பெயர்ந்து விட்டதாகத் தொண்டர் நிறுவன வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

# வாகரை நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரமாகத்தமதுகட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். இப்போது அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டுவிட்டனர்.

ஒரு மணிநேரமாக நடைபெற்ற கடும் சண்டையின் பின்னர் கைப்பற்றப்பட்ட வாகரை நகரப்பகுதியில் படையினர் தமது நிலைகளை ஸ்திரப்படுத்தி வருகின்றனர் - என்றும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை முதல் அரச படைகளின் கண்மூடித்தனமான வான் மற்றும் பீரங்கி, எறிகணைத்தாக்குதல்களுடன்கூடிய மோசமான முன்னெடுப்புகளால், வாகரை ஆஸ்பத்திரி பெரும் பாதிப்புக்குள்ளானது. அதனால், வாகரைப் பகுதி மக்கள் ஆயிரக் கணக்கில் இடம்பெயர்ந்து அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர் - என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மனிதாபிமான விதிகளுக்கு முரணாக, மருத்துவமனையை நம்பித் தங்கள் உறவுகளைத் தங்கவைத்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது படைகள் மிலேச்சத்தனமாகத் தாக்குதல்களை நடத்தியதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

# புத்தளத்தில் மீனவர்கள் மோதல்

புத்தளம் முந்தல் பகுதியில், பெரியபாடு, சின்னபாடு கிராம மீனவர்களிடமே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 6 மீனவர்கள் காயமடைந்தனர். இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக இரண்டு மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரினால் அவர்களது [illegible] -குக்களும் கைப்பற்றப் பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளன.

# புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரினால் அந்தப்பகுதிகளுக்குப் பொருள்களை எடுத்துச் செல்லமுடியாததே இதற்குக் காரணம். இது தொடர்பாக நாம் ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டிருந்தோம். ஆனால், அது சரியான முறையில் மக்களை சென்றடையவில்லை எனவும் அவர் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (த)

# வாழைச்சேனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களாகப் பிரிந்து சென்ற இவர்களில் இரண்டு குழுவினர் வீடு வந்து சேர்ந்துள்ளனர். ஏனைய குழுவைச் சேர்ந்த நான்கு பேர் நேற்றுவரை வீடு திரும்பவில்லை. இவர்கள் இனந்தெரியாத ஆயுதக் குழுக்களினால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை - இவர்களை யாரேனும் கடத்திச் சென்றிருந்தால் மனிதாபிமான அடிப்படையில் அவர்களைவிடுதலை செய்யுமாறு காணாமல் போனவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

---

ட

சிவமயம்

## சைவ பரிபாலனசபை – யாழ்ப்பாணம்
## சைவநெறித் தேர்வு - 2006

மேற்படி தேர்வுக்கான தபால் பொதிகளை வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக திட்டமிட்டவாறு 27-01-2007 அன்று தேர்வினை நடாத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

பரீட்சையை நடாத்துவதற்கான புதிய திகதி பின்னர் பத்திரிகைகள் மூலம் அறிவிக் கப்படும்.

பரீட்சைப் பகுதி,
சைவ பரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

இரா. செல்வவடிவேல்
பதில் பரீட்சைச் செயலர்

---


புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**

2007 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

GAQ | 1st in Com | BA I | B Com

Minimum Requirement :- GCE A/L 3 Passes
ஆரம்பம் :- 20-01-2007

**aat (SriLanka)**

Foundation level, Intermediate level & Final
Medium - Tamil & English Exam :- Jun 2007
Minimum Requirement :- GCE O/L 5 Passes or GCE A/L 2 Passes
ஆரம்பம் -- 20-01-2007 Medium :- English & Tamil

Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.


---

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவன மாணவர்களான பிரதீபன், றோமியன் ஆகியோரின் அன்புத் தந்தை

**ஜோண் ஆபிரகாம் செல்வரட்ணம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எலைற் கல்வி நிறுவனம்,
147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும், வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளருமான

**செல்லையா மதியாபரணம்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்றுத் துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (A-51877)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தரான மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் R.கணேசானந்தன் அவர்களின் தந்தை

**T.இராசரத்தினம்**

அவர்கள் 19.01.2007 அன்று இறைபதமடைந்தமையிட்டு அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (A-51889)

ஆய்வுகூட உத்தியோகத்தர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி



22.12.2006 அன்று
சிவபதமடைந்த
அமரர் வ.செல்வரத்தினம்
அவர்களுக்கு எமது
கண்ணீர்க் காணிக்கை

எம்முடன் நீ இருந்த காலங்கள் எம் பலமான காலங்கள்
எங்களை விட்டுப் பிரிந்த காலங்கள் எம் பலவீனமான காலங்கள்
என்றும் உன் அழியாத நினைவுகளுடன்.

திருமகள் வீதி, அரியாலை.

ஜெயம் குடும்பத்தினர். (57361)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜீவரத்தினம் சரஸ்வதி.



உடுவில், மல்வத்தையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, குருசுமதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜீவரத்தினம் சரஸ்வதி 15.01.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜீவரத்தினத்தின் (ஜீவா) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் வசந்தாதேவி (டென்மார்க்), சுசிலாதேவி (சுவிஸ்), அன்ரன் (ஜெமன்), நிர்மலாதேவி (டென்மார்க்), சுதன் (டென்மார்க்), மஞ்சுளாதேவி (யாழ்ப்பாணம்), சசி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் நவரத்தினம் (டென்மார்க்), செல்வரத்தினம் (சுவிஸ்), பொபி (ஜெமன்), குண ரத்தினம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பொரளையில் தகனஞ்செய்யப்படும். அந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருசுமதவடி, ஆனைக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி சுப்பிரமணியம் மனோன்மணி



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், தாவடியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மனோன்மணி 17.01.2007 புதன்கிழமை வத்தேகமவில் (கண்டி) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சந்தியநாதன் (லண்டன்), கமலநாதன் (சுவிற்ஸர்லாந்து), சிவநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், கண்டி), கமலேஸ்வரி, கலாரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் யசோதா (லண்டன்), பிரேமானந்தி (சுவிற்ஸர்லாந்து), பவதாரணி (வத்தேகம), சிவநாதன் (ஓய்வுபெற்ற உதவித் தபாலதிபர்), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.01.2007) சனிக்கிழமை கண்டியில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
தாவடி வடக்கு. (57355)

தகவல்: ச.சிவநாதன் (மருமகன்-PM), பிள்ளைகள், மருமக்கள்.

## செல்லையா மதியாபரணம்

(உரிமையாளர்- வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ், 258,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)



கடந்த 14.01.2007 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செல்லையா மதியாபரணம் அவர்களது பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று (20.01.2007) சனிக்கிழமை காலை 8 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் (Mahinda Florists) வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தவிர்க்க முடியாத காரணங்களால் அன்னாரது இறுதிக்கிரியைகள் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற முடியாமையையிட்டு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு. (57358)

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

---


## தேவை

* வெளிக்கள உத்தியோகத்தர்கள்
* விநியோகஸ்தர்கள் * விற்பனையாளர்கள்

வயதெல்லை - 18 வயதிற்கு மேல்
கல்வித் தகைமை - G.C.E. (O/L)
ஆர்வமுடையோர் 20.01.2007 இற்கு முன் நேரில் வரவும்.

**P.M.C.**
443, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

118, பலாலி வீதி, திருநெல்வேலியில் பரமேஸ்வரா சந்திக்கும், தபால்பெட்டிச் சந்திக்கும் இடையில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. மேலுள்ள விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## காணவில்லை

வெள்ளை நிறத்தில் மண்நிறமும் கலந்த க.நா. என்ற பெயர் உள்ள பசுவும் மா வெள்ளை கிடாரிப்புப்பசுவும் V.P. எனப் பெயர் உள்ள பசுக்கள் இரண்டையும் 08.01.2007 இல் இருந்து காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

58, பழம் வீதி, கந்தர்மடம்,
தொ.பே.: 021 222 9384

## தவறிவிட்டது

கோப்பாய் தெற்கை சேர்ந்த தவராசா பிறேமினி என்பவரின் தே.அ. அ. இல. (786018372V) யாழ். மையப் பகுதியில் 25.12.2006 ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குறிப்பிட்ட முகவரிக்கு ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.


## விற்பனைக்கு

வளாக வீதி, திருநெல்வேலியில் 3 பரப்பு காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. :
021 222 7577


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியைகளும்



**அமரர் வ.செல்வரத்தினம்**

22.12.2006 அன்று ஜேர்மனியில் சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு வ.செல்வரத்தினம் அவர்களின் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளும் 21.01.2007 ஞாயிறு மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

17A, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை. (57359)

மனைவி, பிள்ளைகள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தெய்வ சித்தன்

**அமரர் இராஜரட்ணம் நடராசா**

(ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

| மண்ணின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 25 - 03 - 1940 | 21 - 12 - 2006 |

திதி : பிரதமை
(20.01.2007)

பிறப்பெடுத்து வளர்ந்துலகில்
பெருவிருட்சம் தானானீர்,
தொழில்தனிலே மேன்மை பெற்று -அரனவனின்
தொண்டராய் புகழ் சேர்த்தீர்!

துணையாளை இழந்தவன்றும்
துயர் மீறித் தளர்ந்தாலும்
அவனன்றி அணுவுமது
அசையாது என நிமிர்ந்தீர்!

பிணியாலே முடங்குற்றுப்
பேரவதி தானுற்றும்
திடமான மனதுடனே
தேவனவன் பணி செய்தீர்!

பிறந்தவூர் புகுந்தவூர்
பெயர் சொல்லப் பெருமைபெற்றீர் - மனக்
களைப்புற்றும் கண்நெகிழ்ந்தும்
ஆறுதில்லை எம் துயரம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல உரும்பிராய் கற்பகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(57043)

- விவேகானந்தன் குடும்பத்தினர். (லண்டன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org